## R 4444 (page 231) (தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்)

## WANDERING INTO "OUTER DARKNESS"

**R4445 : page 232**

### கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பார்

ஒருமுகப்பட்ட பார்வையையும், ஒருமுகப்பட்ட இருதயத்தையும் உடையவர்களை அழைத்து, அவர்களுக்குப் போதித்து, அவர்களை வழிநடத்துவது மாத்திரமல்லாமல், அவர்களை சோதித்து, நிரூபிப்பதும் தெய்வீக நோக்கமாக இருக்கின்றது. "உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் அன்புகூருகிறீர்களோ இல்லையோ என்று அறியும்படிக்கு உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சோதிக்கிறார்" (உபாகமம் 13:3). தேவனுக்குப் பிரதானமாய் அன்பு பாராட்டுவதும், நம்மை நாம் நேசிப்பதுபோன்று நம்முடைய அயலானுக்கும் நியாயம் செய்வதும் - அயலானுக்கு முழுமையான நீதியைப் பாராட்டுதலுமாகிய தெய்வீக நியாயப்பிரமாணமானது, கீழ்ப்படிதலின் பரீட்சையாக இருக்கின்றது. இவைகளோடுகூட அர்ப்பணம் பண்ணியுள்ளவர்கள் மீட்பர் தங்களை அன்புகூர்ந்ததுபோன்று ஒருவரையொருவர் அன்பு செய்ய வேண்டும், அதுவும் ஒருவர் இன்னொருவருக்காகவும், ஒருவர் இன்னொருவருடைய நலன் மற்றும் உதவிக்காகவும் எதையும், எல்லாவற்றையும், ஒப்புக்கொடுத்து, பலிசெலுத்தும் அளவுக்கு அன்புசெய்ய வேண்டும் என்ற புதிய கட்டளையையும் பெற்றிருக்கின்றனர். ஒருவேளை இந்தப் பரீட்சையில் உண்மையாக நிலைத்து நின்றால், இது அந்த நபர், பூரண அன்பின் இலக்கினை எட்டியுள்ளதை மாத்திரம் குறிக்காமல், பரீட்சைகளில் நின்று நிலைத்துள்ளார் என்றும், தெய்வீக நிபந்தனைகளின் கீழ் நித்தியத்திற்குரிய ஜீவனுக்குத் தான் பாத்திரமாய் உள்ளதை நிரூபித்துள்ளார் என்றும் குறிக்கின்றதாயிருக்கும். ஆனால் ஒருவேளை இந்தப் பரீட்சைகளில் நிலைத்து நிற்கவில்லையெனில், இது அந்நபர் ஒளியினின்று தள்ளப்பட்டுள்ளார் என்பதையும், அந்நபர் ஒளியினின்று வெளியேறுவதால், இவருக்கு ஒருகாலத்தில் ஒளியாக இருந்தவைகள் இருளாகத் தோன்றும் மற்றும் இருளானவைகள் அனைத்தும் நீதியானதாகவும், நியாயமானதாகவும், சரியானதாகவும் தோன்றும் என்பதையும் குறிக்கின்றதாயிருக்கும்.

**R4445 : page 233**

கர்த்தரால் அவசியமானது எனக் கூறப்படும் இந்தப் பரீட்சைகள் மற்றும் சோதனைகள் குறித்து முறையிடுவது நமக்கடுத்த காரியமல்ல; நம்மால் அன்புகூரப்படுபவர்கள் ஒளியில் தொடர்ந்து காணப்பட்டு, இறுதியில் இராஜ்யத்தில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று நாம் வற்புறுத்துவதும் நமக்கடுத்த காரியமல்ல. மாறாக தெய்வீக ஏற்பாடுகளையும், நியாயத்தீர்ப்புகளையும் ஒத்துக்கொள்வதின் மூலம், கர்த்தருக்கான நமது கீழ்ப்படிதலைக் காட்டுவதும் மற்றும் முழு இருதயத்தோடும், மனதோடும், ஆத்துமாவோடும், பலத்தோடும் அவர் மீதான நமது அன்பை விவரிப்பதும் நமக்கான காரியமாகும். வேலையில் நாம் கர்த்தரோடுகூட உடன் வேலையாட்களாக - அதாவது அவருடைய அறிவுரையின் அடிப்படையில் மாத்திரம் செயல்படும் உடன் வேலையாட்களாக இருப்பதற்கான சிலாக்கியத்தை அவர் நமக்கு அருளியுள்ளார். முடிவுகள் அவருடைய கரத்தில்தான் உள்ளது. ஒருவேளை இவர்கள் ஒருமுகப்பட்ட பார்வையையும், ஒருமுகப்பட்ட இருதயத்தையும், ஒருமுகப்பட்ட நோக்கத்தையும், தேவனுக்கும், நீதி, நியாயம் மற்றும் அன்பின் கொள்கைகளுக்கும் உள்ள உண்மையையும் தக்கவைத்துக்கொள்ளவில்லையெனில், இவர்களால் அவருடைய சீஷர்களாகத் தொடர்ந்து காணப்பட முடியாது; இவர்களால் ஒளியில் தொடர முடியாது; இவர்கள் "புறம்பான இருளுக்குள்" போயாக வேண்டும்.

ஒருவேளை எவரேனும் அன்பின் ஆவியில், பரிசுத்தத்தின் ஆவியில், தேவனுடைய ஆவியில் வளர்வதற்குத் தவறிப் போவார்களானால், இவர்கள் நிச்சயமாகப் பின்னுக்குப் போய்விடுவார்கள், மேலும்

இவர்களுக்குள் இருந்த ஒளி, இருளாகிவிடும் . . . மாபெரும் இருளாகிவிடும். நமக்காக தம்முடைய ஜீவனையே ஒப்புக்கொடுத்துக் கர்த்தர் வெளிப்படுத்தின அன்பின் ஆவிக்குப் பதிலாக, பகைமையின், பொறாமையின், குரோதத்தின் ஆவி இவர்களுக்குள் கடந்து வருகின்றது; பிரமாணத்தினால் கண்டிக்கப்படும் வெளிப்படையான கொலையைச் செய்யத் தயங்குகிறதும், ஆனால் தங்களுக்கு யார் மேல் கசப்பு ஏற்பட்டிருக்கிறதோ, அந்நபரின் குணநலன்களைக் கொன்று போடுவதற்கும், சகலவிதமான பொல்லாதவைகளை அவர்களுக்கு எதிராக பேசுவதற்கும் தயக்கம் கொள்ளாததுமான கொலை பாதகத்தின் ஆவியானது இவர்களுக்குள் கடந்து வருகின்றது. அவர்களுடைய கனிகளினால் அவர்களை அறிந்துகொள்வீர்கள். இப்படிப்பட்ட முட்கள் திராட்சச்செடிகளிலும், அத்திமரங்களிலும் வளருவதில்லை.

இப்படிப்பட்டவர்களுடைய போக்கின் தத்துவமானது பின்வருமாறு: இவர்கள் கர்த்தருடைய ஆவியை, நீதி, அன்பு, இரக்கம் மற்றும் சத்தியத்தின் ஆவியை இழக்கும்போது, இவர்கள் கர்த்தருடைய மேற்பார்வையையும், வழிநடத்துதலையும், ஆளுகையையும் இழந்து போய்விடுவார்கள். இவர்கள் ஒளிக்குள் வந்தபோது, உலகத்தை ஆளும் சட்டங்களையும், செல்வாக்குகளையும் தூக்கி எறிந்துவிட்டபடியால், இப்பொழுது ஒளியையும் விட்டு வெளியே வந்திருக்க, இவர்கள் ஜீவியத்தின் விஷயத்தில் எவ்விதமான வழிகாட்டியோ, கட்டுபாடுகளோ இல்லாமல் காணப்படுகின்றனர். ஆகவே இவர்கள் தெய்வீக நியமத்திற்கு எதிராக செயல்படுபவர்களாய் மாத்திரம் இராமல், பொதுவான உலகம் பெற்றிருக்கும் வார்த்தை மற்றும் நடத்தை விஷயத்திலுள்ள ஒழுக்கமுறை மற்றும் நீதியின் கொள்கைகளுக்கும்கூட எதிராக செயல்படுகிறவர்களாய் இருப்பார்கள். இக்காரணத்தினால்தான், தற்கால சத்திய வெளிச்சத்தினின்று வெளியேறினவர்களால், உலகத்தாரால் செய்ய முடிகின்றதைக் காட்டிலும் மிகவும் இழிவான, வெறுப்பிற்கிடமான காரியங்களைச் செய்ய முடிகின்றது; அதாவது தங்களுடைய சக மனிதர்கள், தங்களுடைய ஜீவியத்தைப் பற்றி, தங்களுடைய வார்த்தைகள் மற்றும் நடத்தைகள் பற்றி என்ன நினைப்பார்கள் என்ற எண்ணத்தை மனதில் வைத்துக்கொள்வதன் மூலம் ஒழுக்கமாக இருக்க முயற்சிக்கும் உலகத்தாரைக் காட்டிலும், இவர்களால் இழிவான காரியங்களைச் செய்ய முடிகின்றது.

## வெளிச்சத்தின் பிள்ளைகளாக நடந்துகொள்ளுங்கள்

ஒருமுறை பிரகாசிக்கப்பட்டு, பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டு, தேவனுடைய நல்வார்த்தைகளையும், இனிவரும் வல்லமைகளையும் குறித்து ருசிப்பார்த்துள்ளவர்கள் அனைவரும் பக்தி வைராக்கியத்துடன் இருப்பதற்கும், தாங்கள் ஏற்கெனவே அடைந்துள்ள நிலையைத் தக்கவைத்துக்கொள்வதற்கும் நாம் வலியுறுத்துகின்றோம். இவர்கள் தேவனுடைய நேச குமாரனுக்கு ஒத்த சாயலை அடைவதற்கும், இவர்கள் அன்பில் பூரணப்படுவதற்கும், கோபம், குரோதம் பகை, பொறாமை, கசப்பு ஆகியவைகளைக் களைந்துபோடுவதற்கும் நாம் வலியுறுத்துகின்றோம்; ஒருவேளை கோபம், குரோதம் முதலியவைகளை இவர்கள் தங்களுக்குள் வைத்துக்கொண்டால், இவர்கள் குருடான நிலைக்கும், "புறம்பான இருளுக்கும்" போவதற்கு ஏதுவாகிவிடும். இன்னுமாக இவர்கள் கர்த்தருடைய ஆவியின் கனிகளாகிய சாந்தம், நற்குணம், பொறுமை, நீடிய பொறுமை, சகோதர சிநேகம், அன்பு ஆகியவற்றைத் தரித்துக்கொள்ளவும் வலியுறுத்துகின்றோம். கிறிஸ்துவின் மணவாட்டி வகுப்பாரில் அங்கங்களாக ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஒவ்வொருவராலும் அடைய பெற்றிருக்க வேண்டும் எனத் தேவனால் முன் தீர்மானிக்கப்பட்டுள்ள மீட்பருக்கு ஒத்த சாயலை வளர்த்துவதற்கும், பெலப்படுத்துவதற்கும் இந்த ஆவியின் கனிகள் உதவுகின்றன; "ஆகையால் சகோதரரே,உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை. இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்" (2 பேதுரு 1:10, 11).